www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 7

தேர்வு எண்

| | | | | | |
|---|---|---|---|---|---|

# இரண்டாம் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு(SA)-2023-24

## தமிழ்

நேரம் : 2.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 60

**I. சரியான விடையைத் தெரிவு செய்க.** 14X1=14

1. கடலில் துறைமுகம் அறியாமல் கலங்குவன ------
   அ) மீன்கள் ஆ) மரக்கலங்கள் இ) தூண்கள் ஈ) மலை
2. எதுகை இடம் பெறாத இணை ------
   அ) இரவு – இயற்கை ஆ) வங்கம் – சங்கம் இ) உலகு – புலவு ஈ) அசைவு – இசைவு
3. தமிழர்கள் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தியது ------
   அ) கலம் ஆ) வங்கம் இ) நாவாய் ஈ) ஓடம்
4. வடமொழி என்று அழைக்கப்படும் மொழி ------
   அ) மலையாளம் ஆ) கன்னடம் இ) சமஸ்கிருதம் ஈ) தெலுங்கு
5. 'ஏடெடுத்தேன்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ------
   அ) ஏடெடு + தேன் ஆ) ஏட்டு + எடுத்தேன் இ) ஏடு + எடுத்தேன் ஈ) ஏ + டெடுத்தேன்
6. எவன் + ஒருவன் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்
   அ) எவன்ஒருவன் ஆ) எவன்னொருவன் இ) எவனொருவன் ஈ) ஏன்னொருவன்
7. 'பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்' என்று பாடியவர்
   அ) திருக்குறளார் ஆ) திருவள்ளுவர் இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்
8. நன்னூலின்படி தமிழிலுள்ள ஒரெழுத்து ஒரு மொழிகளின் எண்ணிக்கை ------
   அ) 40 ஆ) 42 இ) 44 ஈ) 46
9. அன்னை தான் பெற்ற ------ சிரிப்பில் மகிழ்ச்சி அடைகிறாள்.
   அ) தங்கையின் ஆ) தம்பியின் இ) மழலையின் ஈ) கணவனின்
10. 'ஏறப் பரியாகுமே' என்னும் தொடரில் 'பரி' என்பதன் பொருள் ------
    அ) யானை ஆ) குதிரை இ) மான் ஈ) மாடு
11. குகை ஓவியங்களில் வண்ணம் தீட்டப் பயன்பட்ட பொருள்களில் ஒன்று ------
    அ) மண்துகள் ஆ) நீர்வண்ணம் இ) எண்ணெய்வண்ணம் ஈ) கரிக்கோல்
12. பின்வருவனவற்றுள் விகுதி பெற்ற தொழிற்பெயர் ------
    அ) எழுது ஆ) பாடு இ) படித்தல் ஈ) நடி
13. ------ தீமை உண்டாகும்.
    அ) செய்யத்தகுந்த செயல்களைச் செய்வதால்
    ஆ) செய்யத்தகாத செயல்களைச் செய்யாமல் இருப்பதால்
    இ) செய்யத் தகுந்த செயல்களைச் செய்யாமல் இருப்பதால்
    ஈ) எதுவும் செய்யாமல் இருப்பதால்
14. தன் குடியைச் சிறந்த குடியாகச் செய்ய விரும்புபவரிடம் ------ இருக்கக் கூடாது.
    அ) சோம்பல் ஆ) சுறுசுறுப்பு இ) ஏழ்மை ஈ) செல்வம்

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5X2=10

15. கலங்கரை விளக்கத்தில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?
16. தோணி என்னும் சொல்லின் பெயர்க்காரணத்தைக் கூறுக.
17. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?
18. பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
19. ஒரு கலை எப்பொழுது உயிர்ப்புடையதாக அமையும்?



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

20. ஓவியங்களின் வகைகள் யாவை?
21. வளர்தல், பேசுதல் – இவை எவ்வகைப் பெயர்கள்? விளக்கம் தருக.
22. 'நன்மை செய்வதிலும் தீமை உண்டாகும்' எப்போது?

III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி. 4X3=12

23. கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?
24. பண்டைத் தமிழரின் கப்பல் செலுத்தும் முறை பற்றி எழுதுக.
25. இலக்கிய வகைச் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
26. கலைகளைப் பாதுகாக்க உங்கள் பொறுப்புகள் எவையேனும் மூன்றினை எழுதுக.
27. கல்வியையும் விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார்?
28. கீரைப்பாத்தியும் குதிரையும் எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன?

IV. அடிமாறாமல் எழுதுக. 3+2=5

29. "வைப்புழிக் கோட்படா" எனத் தொடங்கி, "அல்ல பிற" என முடியும் அழியாச் செல்வம் பாடலை எழுதுக.
30. "தொட்டனைத்து" என தொடங்கும் திருக்குறளை எழுதுக.

V. விடையளிக்கவும். 2X4=8

31. அ) 'இன்பத் தமிழ்க் கல்வி' – பாடலின் மையக்கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக.

(அல்லது)

ஆ) ஓலைச்சுவடி ஓவியங்கள் குறித்து நீங்கள் அறிந்து கொண்டவற்றை எழுதுக.

32. அ) 'தமிழ் ஒளிர் இடங்கள்' கதையைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) "ஆழ்கடலின் அடியில்" கதையைச் சுருக்கி எழுதுக.

VI. ஒரு பக்க அளவில் விடையளிக்கவும். 1X6=6

33. அ) கீழ்க்கணும் குறிப்புகளைக் கொண்டு "எங்கள் ஊர்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.
முன்னுரை – அமைவிடம் – பெயர்க்காரணம் – தொழில்கள் – சிறப்பு மிகு இடங்கள் – திருவிழாக்கள் – மக்கள் ஒற்றுமை – முடிவுரை.

(அல்லது)

ஆ) உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத்தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5X1=5

34. கீழ்க்காணும் புதிரைப் படித்து விடையைக் கண்டறிக.
நான் ஒரு காற்றுக் கருவி.
நான் புல் வகையைச் சேர்ந்த தாவரத்திலிருந்து உருவாக்கப்படுகிறேன்.
எனது பெயர் ஏழு எழுத்துகளைக் கொண்டது.
முதல் இரண்டு எழுத்துகள் ஒரு தாவர வகையைக் குறிக்கும்.
இறுதி மூன்று எழுத்துகள் எனது வடிவத்தை குறிக்கும்.
நான் யார்? ----------

35. தொகைச் சொல்லை விரித்து எழுதுக.
முக்கனி

36. கலைச்சொல் தருக.
Harbour --------

37. ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக.
------ மணம் வீசும்.

38. இடைச்சொல் 'ஐ' சேர்த்துத் தொடரை மீண்டும் எழுதுக.
வீடு கட்டினான்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com